ISSN (ONLINE): 3107-7862

Can Serious Mentally Ill People Get Married?

Dr. மகேஷ் ராஜகோபால், மனநல மருத்துவர், அறம் மருத்துவமனை, திருச்சி.

Tamil Psychiatry Journal, Vol-2, Issue-1, Jan-Mar 2026, Page 6-8

நாம் ஒவ்வொருவரும் திருமணம் செய்து கொண்டு, பிள்ளைகள் பெற்று குடும்பமாக வாழ்வதையே இந்த சமூகம் எதிர்பார்க்கின்றது. திருமண வாழ்வு என்பது ஒருவருடைய சமூக அந்தஸ்தை பிரதிபலிப்பதோடு, சமூகத்தில் சிறப்பாக வாழ்வதற்கும் வழிவகை செய்கின்றது. பருவம் அடைந்த பின்பு குறிப்பிட்ட வயதை எட்டியவுடன் திருமணம் செய்து கொள்வது என்பது இயல்பாகவே பார்க்கப்படுகின்றது. அவ்வாறு, திருமணம் நடைபெறாமல் தாமதமாகும் பட்சத்தில், குடும்பத்தினர்கள் சமூகம் எழுப்பும் தேவையற்ற கேள்விகளுக்கு ஆளாகின்றனர். இந்த சூழ்நிலை குடும்பத்தினர்களுக்கு பெரும் மன அழுத்தத்தைத் தருகின்றது. ஆகையால், தீவிர மன நோயாளிகளுக்கான திருமண வாழ்வில் ஏற்படும் சவால்களைப் புரிந்து கொள்வதிலும், அதை சமாளிப்பதிலும் குடும்பத்தினர்கள் மட்டுமல்லாது மனநல பணியாளர்கள் மற்றும் மருத்துவர்களுக்கும் பெரும் பங்கு இருக்கின்றது.

மனச் சிதைவு நோய், இருமுனை கோளாறு, தீவிர மனசோர்வு நோய் போன்ற முக்கியமான மன நோய்களே தீவிர மன நோய்களாக கருதப்படுகின்றன(1). இந்த தீவிர மன நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், சமூகத்தில் தனியாக இயங்க முடியாத நிலையில் பாதிக்கப்பட்டு, மற்றவர்களை சார்ந்து வாழக்கூடிய சூழ்நிலை உருவாகின்றது.

தீவிர மன நோயாளிகள் தங்கள் வாழ்க்கையில் பல்வேறு கோணங்களில் பாதிபடைக்கின்றனர். உறவுகளில் சிக்கல், வேலையின்மை, பொருளாதார தாழ்வு நிலை போன்ற சவால்களினால் திருமணம் செய்து கொள்வது என்பதும், குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுவது என்பதும் சவால்களாகவே அமைகின்றன. இதனால் குடும்பத்தினர்கள், மனநல மருத்துவரை அணுகி "மன நோயாளிகள் திருமணம் செய்து கொள்ளலாமா? அப்படி என்றால் எப்போது செய்து கொள்ளலாம்? அதனால் என்னென்ன விளைவுகள் ஏற்படும்?" என்பது போன்ற அடுக்கடுக்கான கேள்விகளை கேட்கின்றனர் .

தீவிர மனநோயாளிகள் திருமணம் செய்து கொள்வதினால் நிலையான உறவு மற்றும் இருப்பிடம் போன்ற நற்பயன்கள் ஏற்பட்டாலும், திருமண உறவு சிக்கல்களினால் மன அழுத்தம் ஏற்பட்டு மன நிம்மதி இழந்து, மீண்டும் தீவிர மனநோய் அறிகுறிகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் ஏற்படக்கூடும்(2).

பல்வேறு ஆய்வுகளை ஆராய்ந்ததிலிருந்து பல்வேறு சுவாரசியமான தகவல்கள் கிடைக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் குமார் என்பவரால் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றில், மனசிதைவு நோய் (Schizophrenia) மற்றும் இருமுனை கோளாறு நோயினால் (BPAD) பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர்களிடையே நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றில் கிட்டத்தட்ட 53 % குடும்பத்தினர்கள், தீவிர மன நோயாளிகளால் திருமணம் செய்து கொள்ள முடியும் என்றே கருதுகின்றனர். இதே போல் மற்றொரு ஆய்வு ஒன்றில் 40 முதல் 60 சதவீதம் குடும்பத்தினர்கள், திருமணம் செய்து வைப்பதினால் மனநோய் முற்றிலுமாக குணமடைந்து விடும் என்று நம்புகின்றனர். மற்றொரு ஆய்வின் முடிவில் 73% குடும்பத்தினர்கள் நோயாளிகளால் குடும்ப வாழ்வில் முழுமையாக ஈடுபட முடியும் என்று நம்புவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது(3). மன நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்கான வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுத்து பழகுவதில் சிரமப்படுவார்கள். மேலும், அவர்களுடைய பெற்றோர்கள் தகுந்த வரன் பார்த்து அமைப்பதிலும் சிரமம் கொள்வார்கள். ஏதேனும் வரன் நோயாளிகளை நிராகரித்து ஒதுக்கினால், மன நோயாளிகள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாவார்கள். மேலும், திருமணத்திற்கு பின்னர் மனநோயாளிகள் தாங்கள் தாம்பத்திய உறவு வைத்துக் கொள்வதில் சிரமப்படுவார்கள். தாம்பத்திய உறவில் நாட்டம் குறைதல், விறைப்பு தன்மை குறைதல், உச்சகட்டம் ஏற்படுவதில்

தாமதம் மற்றும் தாம்பத்திய உறவில் அதிருப்தி போன்ற பிரச்சனைகளால், மனநோயாளிகளின் தாம்பத்திய உறவு பாதிப்புக்கு உள்ளாகும். சீனாவில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றில் 70% மனநோயாளிகள் தாம்பத்திய உறவு குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. அவ்வாறு தாம்பத்திய உறவில் ஏற்படும் பாதிப்பானது திருமண வாழ்வில் நிரந்திர பிளவுகளை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்கி விடும்(4).

மேலை நாடுகளை ஒப்பிட்டு பார்க்கும்போது, இந்தியா மற்றும் சீனா போன்ற கிழக்கத்திய நாடுகளில் வசிக்கும் தீவிர மனநோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், அதிகம் திருமணம் செய்து கொண்டு குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. முதன்முறையாக மனச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட 76 நபர்களை, பத்து வருடங்கள் பின் தொடர்ந்து ஆராய்ந்து பார்த்ததில் 70% நபர்கள் திருமண வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளதாக, தேஷ்முக் என்பவரால் நடத்தப்பட்ட ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது(7). இதேபோல், சீனாவில் நடத்தப்பட்டுள்ள மற்றொரு ஆய்வில் 59.12% மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் திருமணம் செய்து கொண்டுள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது(8). நகர்புறத்தில் வாழும் மனநோயாளிகளை விட, கிராமபுரத்தில் வசிக்கும் மன நோயாளிகள் அதிக சதவீதத்தில் திருமணம் செய்து கொள்கின்றனர். பொதுவாக, ஆண்கள் தான் குடும்ப பொறுப்பை ஏற்கின்றனர்(9). இதனால் சம்பாதிக்கும் தேவையும், வேலைக்குச் செல்லும் கட்டாயமும் ஆண்களுக்கு அதிகம் ஏற்படுகின்றது. இதனால் இவர்கள் மீது அதிக எதிர்பார்ப்புகள் ஏற்படுகின்றன. இதற்கு மாறாக, மனநோயால் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு திருமணம் ஆன பின்பு பெரும்பாலானோர் வேலைக்கு அனுப்பப்படுவதில்லை. இதனை பார்க்கும்பொழுது மனநோயால் பாதிக்கப்பட்ட ஆண்களை விட, பெண்களுக்கே அதிக திருமண வாய்ப்பு ஏற்படுவதாக ஆய்வு தெரிவிக்கின்றது(7).

தீவிர மன நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், தங்கள் துணையை தேர்ந்தெடுப்பதில் தயக்கம் காட்டுவார்கள். எதிர் பாலினத்தவர்களிடம் பேசுவதற்கும், பழகுவதற்கும் தயக்கம் காட்டுவதோடு உறவை ஏற்படுத்திக் கொள்வதிலும் அதிக கூச்ச சுபாவத்தோடு இருப்பார்கள். இதனால் இவர்களுடைய தன்னம்பிக்கை மிகவும் குறைந்தே காணப்படும். சில நேரங்களில் வேலைக்குச் சென்று சம்பாதிக்கும் நிலை இருந்தால் தன்னம்பிக்கை உயர்வதோடு, திருமண வாழ்வில் நிலைத்தன்மை ஏற்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பெரும்பாலும், திருமணத்திற்கு முன்பே சம்பந்தம் வீட்டாரிடம் மனநல பாதிப்பு குறித்த முழு விபரங்களை வெளிப்படையாக தெரிவிப்பதில்லை. மேலும் திருமணத்திற்கு முன்பு மருந்துகளை மருத்துவரின் ஆலோசனையின்றி முற்றிலுமாக நிறுத்திவிடுகிறார்கள். இதனால் திருமணத்திற்கு பின்பு மீண்டும் மனநோயின் அறிகுறிகள் ஏற்பட்டுவிடுவதினால் தாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டதாக நினைத்து அதிக மனத்தாங்கலும், ஏமாற்றமும், கோபமும் அடைந்து பல திருமணங்கள் மனம் முறிவு வரைக்கும் சென்று விடுகிறன. மற்ற திருமணங்களை ஒப்பிட்டு பார்க்கும்போது மனநோயினால் பாதிக்கப் பட்டவர்களிடையே விவகாரத்தின் விகிதம் அதிகமாகவே காணப்படுகின்றது. இதுவே திருமணமான பிறகு ஒருவருக்கு தீவிர மனநோய் முதன் முறையாக ஏற்பட்டாலோ அல்லது திருமண பந்தத்தின் மூலமாக கணவன் மனைவி குழந்தைபேரு பெற்றிருந்தாலோ விவாகரத்து ஏற்படுவதற்கான வாய்ப்புகள் குறைவாக உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன(7).

ஆய்வு ஒன்றில் வெறும் 20% மக்கள்தான் மனநல பாதிப்பின் தீவிர நிலையை முழுமையாக வெளிப்படுத்திய பின்பும் சம்மதத்தோடு திருமணம் செய்து கொள்கிறார்கள். மீதமுள்ள 80 சதவீத்தினர் தலைவலி, மனபயம், மன அழுத்தம், தூக்கமின்மை போன்று ஏதோ ஒரு சிறிய காரணங்களாக குறைத்துக்கூறி, தீவிர மனநோய் என்ற உண்மையை மறைத்து விட்டு திருமணம் செய்து கொள்கின்றார்கள். இதனால் திருமணத்திற்கு பின்பு மனநல பிரச்சைகள் குறித்த உண்மைகள் தெரியவரும்போது பெரிய ஏமாற்றம் அடைந்ததாகவே கருதுகின்றனர்.

மனநலத் தொந்தரவால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களுக்கு பிடித்த வரண்களை தேர்ந்தெடுக்க முடிவதில்லை. மேலும், இவர்களுடைய மனநோய் பற்றிய விபரங்கள் மற்றவர்கள் மூலமாக சம்பந்தம் வீட்டார்களுக்கு தெரியவந்தாலோ அல்லது அதைப் பற்றிய சந்தேகங்கள் எழுந்தாலோ திருமண

சம்பந்தங்கள் பாதியிலேயே நிறுத்தப்பட்டு விடுகின்றன. இதுபோன்று, திருமணப்பந்தத்தில் மனநோயாளிகள் ஒதுக்கப்படுவதாலும், கசப்பான அனுபவங்களைக் கண்டு அச்சம் கொள்வதாலும் திருமணத்தைத் ஆரம்பநிலையிலேயே தவிர்த்து விடுகிறார்கள். சில மனநோயாளிகள் தங்களுக்கு பார்க்கப்படும் வரன்கள் பிடிக்கவில்லை என்றாலும் கூட திருமணம் செய்து கொள்ள வேண்டுமே என்ற கட்டாயத்தின் காரணமாக திறனற்ற வரன்களை பிடிக்காமலேயே திருமணம் செய்துகொள்ளும் நிலைகளும் ஏற்படுகின்றன.

தீவிர மன நோயால் பாதிக்கப்பட்டவர்கள் திருமணம் செய்து கொள்வதினால் ஏற்படும் விளைவுகளைப் பற்றிய பல ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. திருமணத்திற்கு பிறகு மீண்டும் மனநோயின் அறிகுறிகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் 70% உள்ளது. இதற்கு, திருமணத்திற்கு பின்பு மருந்துகளை நிறுத்துவதும், திருமண வாழ்வில் ஏற்படும் பல சவால்களை சந்திக்க முடியாத நிலைகளுமே, முக்கிய காரணங்களாக பார்க்கப்படுகின்றன. இருந்தபோதிலும், பெரும்பாலான மனநோயாளிகள் திருமணத்திற்கு பின்பு நிலையான வாழ்வு பெற்று, சமூக பாதுகாப்போடு நிம்மதியான வாழ்க்கை வாழ்வதாக ஆய்வுகள் கூறுகின்றன(10).

தீவிர மன நோயால் பாதிக்கப் பட்டவர்களுடைய கல்வி, உறவு, மற்றவர்களுடன் பழகும் திறன், அன்றாட வேலைகள் செய்யும் திறன் என பல்வேறு விதங்களாக ஆற்றல்கள் பாதிக்கப்பட்டு சமூகத்தில் இருந்தே தனிமைப்படுத்தப்பட்டு இருக்கக்கூடிய நிலைகள் தான் அதிகம் காணப்படுகின்றன. திருமணம் செய்துகொள்வதன் மூலமாக, மனநோயாளிகள் நிலையான வாழ்க்கை பெறுவதற்கும், தனிமையை போக்கிக் கொள்வதற்கும், சமூகத்தோடு இணைந்து வாழ்வதற்குமான நிலை ஏற்படுகின்றன. திருமணத்திற்கு பிறகு ஏற்படும் பல சவால்களை சந்திப்பதற்கான ஆற்றலை வளர்த்துக் கொள்வதற்காக திருமண முடிவுகள் எடுப்பதற்கு முன்பாகவே, Pre-Marital Counselling-களும், மறுவாழ்வு சிகிச்சைகளும் அளித்தல்வேண்டும். இதனால் சமூகத்தில் மற்றவர்களோடு பழகும் திறன், வேலைத்திறன், மனநோய் பற்றிய புரிதல், மருந்துகளின் முக்கியத்துவம் அறிதல் போன்ற பயிற்சி அளிப்பதன் மூலமாக வாழ்க்கையை மென்மேலும் மேம்படுத்திக்கொள்ள முடியும்.

REFERENCE

1. Viron MJ, Stern TA. The impact of serious mental illness on health and healthcare. Psychosomatics 2010;51:458–65. doi: 10.1176/appi.psy.51.6.458.
2. Nyer M, Kasckow J, Fellows I, Lawrence E, Golshan S, Solorzano E, et al. The relationship of marital status and clinical characteristics in middle-aged and older patients with schizophrenia and depressive symptoms. Ann Clin Psychiatry 2010;22:172–9.
3. Kumar P, Sharma N, Ghai S, Grover S. Perception about marriage among caregivers of patients with schizophrenia and bipolar disorder. Indian J Psychol Med 2019;41:440–7. doi: 10.4103/IJPSYM.IJPSYM_18_19.
4. Behere PB, Mulmule AN, Chowdhury D, Nagdive AB, Behere AP, Yadav R, et al. Effect of Marriage on women with schizophrenia. Int Curr Res Rev 2021;13:88–93. https://doi.org/10.31782/IJCRR.2021.13309
5. Vaingankar JA, Abdin E, Chong SA, Shafie S, Sambasivam R, Zhang YJ, et al. The association of mental disorders with perceived social support, and the role of marital status: Results from a national cross-sectional survey. Arch Public Health 2020;78:108. doi: 10.1186/s13690-020-00476-1.
6. Hou CL, Zang Y, Rosen RC, Cai MY, Li Y, Jia FJ, et al. Sexual dysfunction and its impact on quality of life in Chinese patients with schizophrenia treated in primary care. Compr Psychiatry 2016;65:116–21. doi: 10.1016/j.comppsych.2015.11.002.
7. Deshmukh V, Bhagat A, Shah N, Sonavane S, Desousa AA. Factors affecting marriage in schizophrenia: A cross-sectional study. J Ment Health Hum Behav 2016;21:122–4. https://doi.org/10.4103 / 0971-8990.193432.
8. Salokangas RK, Honkonen T, Stengård E, Koivisto AM. To be or not to be married--That is the question of quality of life in men with schizophrenia. Soc Psychiatry Psychiatr Epidemiol 2001;36:381–90. doi: 10.1007/s001270170028.
9. Behere PB, Verma K, Amit BN, Mansharamani H, Behere AP, Yadav R, et al. Is marriage solution for persons with schizophrenia. Med Sci 2020;24:2663–74.
10. Drisya P, Bindumol K, Saleem TK, Narayan D. Marital problems among partners of patients with bipolar affective disorder. Indian J Psychol Med 2019;41:448–54. doi: 10.4103/IJPSYM.IJPSYM_409_1